# யோசேப்பு தன் பிதாவினால் சிநேகிக்கப்பட்டான்




வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: ஷாலோம், ஜனவரி 12, 1964, சியராவிஸ்டா, அரிசோனா, அமெரிக்கா

153. யோசேப்பைப் பாருங்கள், அவனுடைய சகோதரர்களாகிய கோத்திரப் பிதாக்களின் மத்தியில் அவன் பிறந்தான்,




அவனே எல்லோருக்கும் இளையவன் (இல்லை, இளையவனுக்கு முந்தினவன்; பென்யமீன் தான் எல்லோருக்கும் இளையவன்). இளையவனுக்கு முந்தினவன் அவன் தன் சகோதரரால் வெறுக்கப்பட்டு, தன் பிதாவினால் சிநேகிக்கப்பட்டான்.



அவன் ஆவிக்குரியவனாயிருந்தபடியால் வெறுக்கப்பட்டான். அவனுக்கு சொப்பனங்களின் அர்த்தத்தைக் கூற முடிந்தது. அவை சரியாக இருந்தன.

அவனால் தரிசனங்களைக் கண்டு, வரப்போகும் சம்பவங்களை முன்னறிவிக்க முடிந்தது. அவர்கள் அவனை வெறுத்தனர்.

அவன் முப்பது வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான்.



154. அவர்கள் ஏன் இயேசுவை வெறுத்தனர்? அவர்கள் அவரை பெயெல்செபூல் என்று அழைத்தனர். ஏனெனில் அவர் வார்த்தையாயிருந்தார், வார்த்தையானது இருதயங்களில் மறைந்துள்ள சிந்தனைகளை அறிந்து கொள்ளும்.

அவர்கள் அவரை வெறுத்தனர். அவர்கள் அவரை முப்பது வெள்ளிக்காசுக்கு விற்றனர்.



155. யோசேப்பு மரித்துப்போனான் என்று நினைத்து அவனுடைய சகோதரர்கள் அவனைக் குழியில் எறிந்தனர்.

இரத்தம் தோய்ந்த அவனுடைய அங்கி அங்கே விடப்பட்டது - இயேசுவின் மரணத்தை அடையாளம் கண்டு கொள்வதற்காக அவர் அணிந்திருந்த அந்த இரத்தம் தோய்ந்த அங்கி விடப்பட்டது போல,



ஆனால் தேவன் யோசேப்புக்கு என்ன செய்தார்? அவர் அவனைக் குழியிலிருந்து வெளியே கொண்டு வந்து, பார்வோனின் வலது பாரிசத்தில் உட்காரவைத்தார்.

யாரும் பார்வோனைக் காண முடியாது, யோசேப்பைத்தான் காணமுடியும்.

யோசேப்பு அரண்மனையை விட்டு வெளியே வந்த போது, எக்காளங்கள் முழங்கின. “யோசேப்பு வருகிறார், முழங்கால் யாவும் முடங்கட்டும்” என்னும் பிரகடனம் செய்யப்பட்டது.



156. அதேதான் இயேசுவும். அவர் ஒரேயடியாக மரித்துப் போய் விட்டார் என்று கருதி அடக்கம் பண்ணப்பட்டு குழியிலிருந்து அவர் உயிரோடே வெளியே எடுக்கப்பட்டு, இப்பொழுது மகிமையுள்ளவரின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்.

“தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்”.

அவர் அங்கிருந்து புறப்பட்டு வரும் போது, எக்காளங்கள் முழங்கும், முழங்கால்

யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்.

பாருங்கள், அவர் செழிப்பின் ராஜகுமாரன். அப்பொழுது எகிப்து என்ன செய்ததென்று பாருங்கள், பஞ்சம் வந்தபோது, அது முழு உலகத்தையும் காப்பாற்றினது.



மனுஷகுமாரனின் வருகையின் போதும் அவ்வாறே இருக்கும். முழங்கால் யாவும் அவருக்கு முன்பாக முடங்கும், நாவுகள் யாவும் அவர் கர்த்தரென்று அறிக்கை பண்ணும்.

★★★★★

## செய்தி: சிறந்த வேலைப்பாடு,

Jeffersonville, Indiana, USA, 64-07-05

58. அதன் பின்பு யோசேப்பில் நாம் காண்கிறோம். யோசேப்பு விசித்திரமாகப் பிறந்த ஒரு பையன். அவன் தான் எல்லாரிலும் இளையவன்.

சிறந்த வேலைப்பாடாகிய சிற்பம் கட்டப்படுவதற்கென உண்டாக்கப்பட்ட அஸ்திபாரத்தின் மேல் பாகம் அவன்.

அது விசுவாசத்தில் தொடங்கி, அன்பு, கிருபை வழியாய் வந்து, பரிபூரணத்தையடைகின்றது. அவ்வாறே அது

சிற்பத்தின் காலில் தொடங்கி, கிறிஸ்துவின் பரிபூரணமடைகின்றது.

அவர் எவ்வாறு யோசேப்பில் முன்னடையாளமாக இருந்தார் என்பதைக் கவனியுங்கள். யோசேப்பு தான் அஸ்திபாரத்தின் மேல் பாகம்.

அவர்கள் அனைவரிலும் அவன் பரிபூரணமானவன். சட்டப்படி விவாகம் செய்த ஸ்திரிக்கு – யாக்கோபின் மனைவிக்கு – யோசேப்பு பிறந்தான்.

அவன் பிறந்தபோது, அவனுடைய பிதா அவனை சிநேகித்தார். ஆனால் அவனுடைய சகோதரரோ அவனை முகாந்தரமின்றிப் பகைத்தனர்.

அவனை ஏன் அவர்கள் பகைத்தனர்? ஏனெனில் அவன் வார்த்தையாயிருந்தான். அஸ்திபாரமே என்னவென்று பார்த்தீர்களா?

அஸ்திபாரத்தின் மேல் பாகம் எப்படி வருகிறது என்று பாருங்கள். சரீரத்தின் தலையும் எப்படி அமைகிறது என்று கவனியுங்கள்.

மணவாட்டியின் தலை வருவதைக் கவனியுங்கள். பார்த்தீர்களா? யோசேப்பு வார்த்தையாயிருந்தான். அவன் தரிசனம் காண்கிறவனாயிருந்தபடியால், அவனுடைய சகோதரர்கள் அவனைப் பகைத்தனர்.



அவன் காரியங்களை முன்னறிந்து, அவர்களிடம் முன்னுரைத்தான். அவன் கூறினவை நிறைவேறின. அது எவ்வளவு காலதாமதமானாலும், அவை அப்படியே நிறைவேறின.

அவன் ஆவிக்குரியவனாயிருந்தபடியால், அவனுடைய சகோதரர்கள் அவனைப் புறம்பாக்கிப் போட்டனர். உண்மையில்


அவர்கள் அவனை நேசித்திருக்க வேண்டும். ஆனால் அவன் தீர்க்கதரிசியாயும் ஆவிக்குரியவனாயுமிருந்தபடியால், அவர்கள் அவனைப் பகைத்தனர்.

59. கவனியுங்கள், அவன் ஏறக்குறைய முப்பது வெள்ளிக் காசுக்கு விற்கப்பட்டு, குழியிலே போடப்பட்டு, மரித்துப் போனான் என்று கருதப்பட்டான். அவனோ குழியிலிருந்து வெளியே எடுக்கப்பட்டான்.



சிறையில் அவன் சோதனை நேரத்தை அனுபவித்துக் கொண்டிருந்தபோது, அங்கு பானபாத்திரக்காரனும் சுயம்பாகியும் இருந்தனர்.

பானபாத்திரக்காரன் இரட்சிக்கப்பட்டான், ஆனால் சுயம்பாகியோ கைவிடப்பட்டான் என்பதை நாம் அறிவோம்.



அவ்வாறே கிறிஸ்துவின் சிறையாகிய சிலுவையிலும் ஒருவன் இரட்சிக்கப்பட்டான். மற்றவன் கைவிடப்பட்டான் – இரு கள்ளர்கள், இரு குற்றவாளிகள்.



அவன் சிறையிலிருந்து எடுக்கப்பட்டு பார்வோனின் வலது பாரிசத்தை அடைகிறான். யாரும் பார்வோனிடம் பேச முடியாது. யோசேப்பின் மூலமாகவே பேச வேண்டும்.

யோசேப்பு பார்வோனின் சிங்காசனத்தை விட்டு வெளியே வந்தபோது, எகிப்து முழுவதிலும் எக்காளம் தொனித்து, "எல்லோரும் முழங்காற்படியுங்கள், யோசேப்பு வருகிறார்" என்று அறிவித்தது!

60. இயேசுவுக்கும் அவ்வாறே நிகழும். அவரும் எவ்வளவாய் பிதாவினால்

சிநேகிக்கப்பட்டு, தமது ஸ்தாபன சகோதரர்களால் முகாந்தரமின்றி பகைக்கப்பட்டார்!

அவர் சரியாக முப்பது வெள்ளிக் காசுக்கு விற்கப்பட்டார். அவர் ஒரேயடியாக மரித்துவிட்டாரென்று எண்ணி அவரைக் குழியில் (கல்லறையில் தள்ளினார்கள்).

சிலுவையில் ஒருவன் கைவிடப்பட்டான். மற்றவன் இரட்சிக்கப்பட்டான். அவர் சிலுவையிலிருந்து உயர்த்தப்பட்டு இராஜ கெம்பீரத்தில், அவரில் பிரதிபலித்த அந்த மகத்தான ஆவியாயிருக்கிற தேவனின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

இயேசுவின் மூலமேயன்றி எவரும் தேவனிடத்தில் பேச முடியாது. யோசித்துப் பாருங்கள்!

அவர் சிங்காசனத்தை விட்டுப் புறப்பட்டு வரும்போது, எக்காளம் தொனிக்கும். அப்பொழுது முழங்கால் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்...

யோசேப்பு செழிப்பின் குமாரனாயிருந்தான் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள்.

அவன் செய்த அனைத்தும் செழித்தோங்கின். அது சிறையானாலும், வேறெங்கானாலும், எல்லாம் சிறப்பாக அமைந்தன. அதுபோன்று, தேவனும், தமது பிள்ளைகளுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்குமென்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் அல்லவா?

அது வியாதியாயிருந்தாலும் சரி, சிறையாயிருந்தாலும், மரணம், துயரம் எதுவாயிருப்பினும், அவரில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும்.

அவர் அங்ஙனம் வாக்களித்துள்ளதால், அது அவ்வாறே நிறைவேற வேண்டும். அவருக்குள் அது மறைபொருளாக நமக்குப் பேசப்பட்டுள்ளது.

அவரே தேவனின் பரிபூரண சாயலாயிருந்தார்.

அவர் மறுபடியுமாக வரும்போது நாம் பார்க்கிறோம்...

61. ஞாபகமிருக்கட்டும், வெளிப்பாட்டின் மூலம் பெற்ற தன் மகத்தான தீர்க்கதரிசனத்தின் மூலமாய், யோசேப்பு உலகை அழிவினின்று காத்தான்.

யோசேப்பு இல்லையென்றால் உலகம் அழிந்து போயிருக்கும். அது போன்று, இயேசு இல்லையென்றால், இவ்வுலகம் அழிந்து போயிருக்கும், "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16). தேவன் ஜீவனைப் பாதுகாக்கிறார்.

62. இப்படி நாம் சொல்லிக்கொண்டே போகலாம். அவர் தாவீதுக்கு பொருத்தமானவராய் இருந்தார்.

அவர் மோசேக்குப் – பொருத்தமானவராய் இருந்தார்.

அவர் எலியாவுக்குப் பொருத்தமானவராய் இருந்தார்.

அவர் எலிசாவுக்கு பொருத்தமானவராக இருந்தார்.

அவர் யோசேப்புக்கு பொருத்தமானவராய் இருந்தார்.

அவர்கள் ஒவ்வொருவரும் பழைய ஏற்பாட்டில் அவரைச் சித்தரிக்கிறவர்களாகத் திகழ்ந்து, அவரைக் குறித்து முன்னறிவித்து, அவரில் பிழையின்றிப் பொருந்தினார்கள்.

அது என்ன? அது வரப்போகிற பரிபூரணமான மீட்பரை முன்னறிவித்து, சலவைச் சாலையில் நமது அழுக்குத் துணிகளைக் கொடுத்து விட்டு, அதை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறிவிக்கின்றது.

அது ஆட்டுகுட்டியானவருடைய இரத்தத்தினால் கழுவப்படுகின்றது. நமக்குச் சொந்தமானவைகளை நாம் உரிமை கோரி பெற்றுக் கொள்ளலாம்.

அவர் எதற்கெல்லாம் மரித்தாரோ, அவை அனைத்தையும் நாம் மீண்டும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆகவே அவர் சித்தரிக்கப்பட்ட பரிபூரண வார்த்தையாயிருந்தார்.

★★★★★

*குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. நன்றி.*